# செயலாற்றுகை அறிக்கை 2018

## (2018.01.01 - 2018.12.31)

சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்


இல. 80,4 ஆம் மாடி, அதிகரண மாவத்தை, கொழும்பு 12

www.lawcom.gov.lk

## 01. அறிமுகம்

1969 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கச் சட்டஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் இலங்கை சட்ட ஆணைக்குழு தாபிக்கப்பட்டதுடன், இலங்கையின் சட்ட ஆணைக்குழு சட்ட மறுசீரமைப்புக்களை விதப்புரை செய்யும் அரசாங்கத்தின் பிரதான நிறுவனமாகும். நிருவாகத்திற்காகவும், ஆராய்ச்சிகளுக்காக ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

## 02. நோக்கு

- நல்லாட்சிக்காக சட்டத்தின் மறுசீரமைப்புக்களை மேம்படுத்தல்.

## 03. செயற்பணிகள்

- சட்ட மறுசீரமைப்புக்களை மேம்படுத்துவதற்காக 1969 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்ட ஆணைக்குழுச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள பணிகளை செயற்படுத்தல்.

## 04. நோக்கங்கள் மற்றும் பணிகள்

சட்ட ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாவது, சட்ட மறுசீரமைப்புக்களை மேம்படுத்துவதே ஆகும். அத்தகைய மேம்பாடுகளை நோக்கமாகக் கொண்டு சட்ட ஆணைக்குழுவின் மூலம் பின்வரும் பணிகள் செயற்படுத்தப்படுகின்றன.

i. சட்டத்தைக் கோவைப்படுத்தல்

ii. சட்டத்தின் முரண்பாடுகளை ஒழித்தல்

iii. சட்டத்தை முறையாக அபிவிருத்தி செய்து மறுசீரமைப்பதற்காக பொருள் அளவிலானதும் நடவடிக்கைமுறை சார்ந்ததுமான சட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் நடாத்திச் செல்லல்.

iv. வழக்கொழிந்த மற்றும் அனாவசியமான சட்டங்களை அகற்றல்

v. சட்டத்தை எளிதாக்குதலும் நவீனமயப்படுத்தலும்

vi. சட்டமறுசீரமைப்புக்கான முன்மொழிவுகளைப் பெற்றுக் கொண்டு அவற்றை பரிசீலித்தல்.

vii. மறுசீரமைப்பதற்காக காலத்துக்குக்காலம் சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளை ஆராய்வு செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து அமைச்சுக்குச் சமர்ப்பித்தல்.

viii. ஏனைய நாடுகளின் சட்டமுறைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.

ix. துணைச் சட்டவாக்கங்கள் நன்கு ஏற்றுக் கொண்ட கோட்பாடுகளுக்கும் சட்டவாட்சிக்கும் இயைபானதென்பதைப் பாதுகாக்கும் எண்ணத்துடன்

பாராளுமன்றம் அல்லாத வேறுசபைகளால் துணைச் சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தை அமுல்படுத்துவதை நிரந்தரமாக மீளாய்வு செய்தல்.

x. வழக்காடுதல் சம்பந்தப்பட்ட நிருவாகத் தன்மையின் நடவடிக்கைமுறை உட்பட சட்ட நடவடிக்கை முறைகளை பகுத்தறிவு செய்தல் மற்றும் எளிதாக்குவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை முறையாக தயார் செய்தல்.

xi. சிங்களம், தமிழ், ஆங்கிலம், ஆகிய மொழிகளில் சட்டத்தைக் கோவைப்படுத்துவதற்கு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயார் செய்தல்.

**சட்ட ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களாக பின்வருபவர்கள் நியமிக்கப்பட்டனர்.**

1. சனாதிபதி சட்டத்தரணி திரு. ரொமேஷ் த சில்வா (தலைவர்)
2. பேராசிரியர் திரு. லக்ஷ்மன் மாரசிங்க
3. சனாதிபதி சட்டத்தரணி திரு. பாலித பெர்னாந்து
4. திரு. ஜே.எம். சுவாமிநாதன்
5. திரு. என். செல்வகுமாரன்
6. சனாதிபதி சட்டத்தரணி திரு.எம். இக்ரம் மொகமட்
7. சனாதிபதி சட்டத்தரணி திரு. எஸ். அனில் சில்வா
8. சனாதிபதி சட்டத்தரணி கலாநிதி. திரு. ஹர்ஷ கப்ரால்
9. சனாதிபதி சட்டத்தரணி திரு. மனோஹார த சில்வா
10. சனாதிபதி சட்டத்தரணி திரு. சஞ்சீவ பீ. ஜயவர்தன
11. திருமதி. தாரணி எஸ். விஜேதிலக
12. பேராசிரியர் திருமதி. காமினா குணரத்ன
13. திரு. ஜீ.ஜீ. அருள்பிரகாசம்
14. திரு. திசத் விஜேகுணவர்தன
15. திரு.நவீன் சுரத் மாரபன

**பதவி நிலையில் நியமனம் பெற்ற உறுப்பினர்கள்**

I. திருமதி. தீபானி குமாரஜீவ, சட்ட வரைநர்/ சட்டவரைநர் திணைக்களம்

II. திருமதி. பியுமந்தி பீரிஸ், மேலதிகச் செயலாளர் (சட்டம்) நீதி அமைச்சு.

III. சனாதிபதி சட்டத்தரணி திரு. சஞ்சய இராஜரத்தினம், மேலதிக சொலிஸிட்டர் ஜனரால்/ சட்டமா அதிபரி திணைக்களம்.

**திணைக்களப் பதவியிநர்.**

- திருமதி. செவ்வந்தி அபேசேகர, செயலாளர் (பதில்)/ சட்ட ஆணைக்குழு.
- திருமதி. லிலந்தி பதினாகொட, உதவிச் செயலாளர்/ சட்ட ஆணைக்குழு.
- திருமதி யசங்கி சதுரங்கிகா, உதவிச் செயலாளர்/ சட்ட ஆணைக்குழு.

## 5. 01.01.2018 முதல் 31.12.2018 வரை சட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் முன்னேற்றம்

<u>கால :- 2018.01.01 – 2018.09.30</u>

1) நீதிமன்றத்தை அவமதித்தல் சட்டம்

| | |
|---|---|
| பரிந்துரையின் பெயர் | நீதிமன்றத்தை அவமதித்தல் சட்டம் |
| பின்னணி | முன்மொழியப்பட்ட சட்டத்தின் பிரதான குறிக்கோள் நீதிமன்றத்தை அவமதித்தல் சட்டத்தை தொகுப்பதற்கும் மற்றும் அதன் விடயப்பரப்பை தெளிவுபடுத்துவதுமாகும். |
| தற்போதைய நிலைமை | கலந்துரையாடலில் உள்ளது:<br><br>திரு. ஜே.எம். சுவாமிநாதன் அவர்களால் தயாரிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட நீதிமன்றத்தை அவமதித்தல் சட்டத்தின் வரைவொன்றை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டுள்ளது. |

2) நீதிமன்ற வழக்குடன் தொடர்புடைய விடயப் பொருட்களை விற்றுத் தீர்த்தல் தொடர்பான சட்டம்

| | |
|---|---|
| பரிந்துரையின் பெயர் | நீதிமன்ற வழக்குடன் தொடர்புடைய விடயப் பொருட்களை விற்றுத் தீர்த்தல் தொடர்பான சட்டம். |
| பின்னணி | நீதிமன்றத்தின் களஞ்சியசாலை காப்பாளரின் கட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள், ஆடைகள் மற்றும் தடைசெய்யப்பட்ட குடிபான போத்தல்கள் மற்றும் போதைப் பொருட்கள் போன்ற விடயப் பொருட்களை அவை வழக்கு விளக்கத்தின் போது நீதிமன்றில் சமர்ப்பித்து அத்தகைய விடயப் பொருட்களை வல்லுனர் சான்றில் வெளிப்படுத்தப்பட வேண்டியுள்ளது. அவைகளை வழக்கு விளக்கம் முடிவடைந்த பின்னர் நீதிமன்றத்தின் கட்டளையொன்றினால் மாத்திரமே விற்றுத் தீர்க்க முடியும். |
| தற்போதைய நிலைமை | கலந்துரையாடலில் உள்ளது:<br><br>நீதிமன்ற விடயப் பொருட்களை விற்றுத் தீர்த்தல்-வகைப்படுத்தல் தொடர்பில் திரு. சன்ஜீவ ஜயவர்த்தன ஜனாதிபதி சட்டத்தரணி அவர்களால் தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட வரைவை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. |

3) விவாகரத்து, கட்டுக்காப்பு மற்றும் விவாகரத்து கொடுப்பனவு தொடர்பான சட்டம்

| | |
|---|---|
| பரிந்துரையின் பெயர் | ஏற்கனவே இருக்கின்ற விவாகரத்து, கட்டுக்காப்பு மற்றும் விவாகரத்து கொடுப்பனவு தொடர்பான சட்டத்துக்கான திருத்தம் |
| பின்னணி | சீர்செய்ய முடியாத விவாகரத்து தொடர்பிலான விவாகரத்து, கட்டுக்காப்பு மற்றும் விவாகரத்து கொடுப்பனவு தொடர்பாக ஏற்கனவே இருக்கின்ற சட்டம் மற்றும் கட்டளைச் சட்டங்கள் என்பவற்றில் உள்ள விடயங்களை இலகுவாக விளங்கிக் கொள்வதற்கு முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு மேலுள்ள விடயங்களுக்கு ஒரு தனிச் சட்டத்தை தயாரித்தல்.<br>• புரிந்துணர்வு ரீதீயான ஒரு நிலைமை<br>• திறத்தவர் ஒருவர் விவாகரத்துக்கு விருப்பில்லாததன் காரணமாக பரஸ்பர சம்மதமில்லாத ஒரு நிலைமை<br><br>கட்டுக்காப்பு: பிள்ளையின் சிறந்த அக்கறை<br><br>விவாகரத்து கொடுப்பனவு: நியாயமானதும் மற்றும் சமத்தவமானதுமான நியாயாதிக்கம்<br><br>பராமரிப்பு: இது தொடர்பான நியாயாதிக்கம் நீதவான் நீதமன்றத்துக்கு அல்லாமல் மாவட்ட நீதமன்றத்துக்கு வழங்கப்படவுள்ளது என்பதோடு அதற்கு ஒரு துணை இணைப்பாக போதிய வலுவுட்டல் மற்றும் தண்டனைக்குரிய தத்துவங்களை மாவட்ட நீதிமன்றத்துக்கு வழங்கப்படவுள்ளது. |
| தற்போதைய நிலைமை | கலந்துரையாடலில் உள்ளது:<br><br>1) திரு. சன்ஜீவ ஜயவர்தன ஜனாதிபதி சட்டத்தரணி அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைவு கடலந்துரையாடப் பட்டிருக்கின்றது.<br><br>விவாகரத்துக்கான பின்னணிகளுக்காக, பின்வரும் சில திருத்தங்களை ஆணைக்குழு முன்மொழிந்துள்ளது,<br>• தீய எண்ணத்துடன் விட்டுச் செல்லல்<br>• விபச்சாரம்<br>• திருமணத்தின்போது ஏற்படுகின்ற குணமாக்க முடியாத பாலியல் குறைபாடு<br>• கொடுரம்<br>• உடல் ரீதியான மற்றும் உளரீதியான துஷ்பிரயோகம்<br>• பிரிதல் (இரண்டு வருடங்கள்)<br><br>2) 22.03.2018 ஆம் திகதியுடைய MOJ/L/(1)/360/2018 ஆம் இலக்கத்தையுடைய கடிதத்தின் மூலம் மேலே சொல்லப்பட்ட திருத்தம் தொடர்பான விளக்கத்தை நீதி அமைச்சு கோரியுள்ளது.<br><br>3) தலைவரின் வழிகாட்டல்களின் கீழ், மேலே சொல்லப்பட்ட முடிவு செய்யப்பட்ட வரைவை பின் தொடர்வதற்கு 13.09.2018 ஆம் திகதியுடைய LC/R/03/2018 ஆம் இலக்கத்தையுடைய கடிதத்தின் மூலம் நீதி அமைச்சின் மேலதிகச் செயலாளர் (சட்டம்) அம்மணி பியுமதி பீரிஸ் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. |

4) சிறுவர்கள் இறப்பு தொடர்பில் இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்தல்

| பரிந்துரையின் பெயர் | சிறுவர்கள் இறப்பு தொடர்பில் இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்தல் |
|---|---|
| பின்னணி | ரோமன் டச் சட்டத்தின்கீழ், உதாசீனத்தால் அல்லது விபத்தித்தினால் ஒரு பிள்ளை இறந்தால், அதனால் பெற்றோர்கள் அனுபவிக்கின்ற உளரீதியான சுகவீனம் மற்றும் ஏற்படுகின்ற விளைவுகளுக்கு நடவடிக்கை ஒன்றின் மூலம் இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது.<br><br>இந்த நிலைமை நடைமுறையில் நீதி நியமனங்களோடு இணங்கியொழுகுவதில்லை என்பது தெளிவான விடயமாகும். மூன்றாம் திறத்தவர் ஒருவரின் உதாசீனம் அல்லது கவனயீனத்தின் விளைவாக பிள்ளை ஒன்று இறக்கின்ற போது உளரீதியான வலி மற்றும் பாதிப்புக்கான சேதங்களைப பெற்றுக் கொள்வதற்கு ஒரு பெற்றாருக்கு இயலுமாக இருக்க வேண்டும்.<br><br>பிள்ளை ஒன்றின் இறப்புக்கு காரணம் மூன்றாம் திறத்தவர் ஒருவரின் உதாசீனம் அல்லது கவனயீனத்தின் காாரணமாக இருக்கின்றபோது பெற்றோருக்கு ஏற்படுகின்ற உளரீதியான பாதிப்புக்கும் மற்றும் எதிர்கால சம்பாத்தியங்களுக்கான இழப்புக்களை பெற்றுக் கொள்ளப்படக் கூடியதாக இருக்க வேண்டும். |
| தற்போதைய நிலைமை | தங்கி வாழ்பவர் ஒருவரின் இறப்புக்கான இழப்புக்களைப் பெற்றுக் கொள்தல் மீதான இறுதி வரைவுச் சட்டத்தை 29.06.2018 ஆம் திகதி சட்டவரைஞர் திணைக்களத்தால் நீதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

5) தடை எச்சரிக்கை

| பரிந்துரையின் பெயர் | தடை எச்சரிக்கை |
| --- | --- |
| பின்னணி | நாணயத்தாழ்கள் மற்றும் குற்றிகள் என்பவற்றின் உரிமையாளர் யார் என்பதை நிரூபித்தல் என்பது இயல்பாகவே சிரமமாகும் என்பதோடு கடுமையான எச்சரிக்கை சோதனையை பிரயோகிக்காமல் பணத் தொகைகளை விடுவிப்பதற்கு விரும்பப்பட முடியாது. குறிப்பிட்ட நபர் ஒருவரின் உடமையிலிருந்து எடுக்கப்பட்ட அல்லது திருடப்பட்ட பணங்களின் முதல் நிலைச் சான்று தெளிவாக இருக்கின்றவிடத்து, நீதிமன்றத்தின் தற்தீர்மானத்தில் பொருத்தமானதாகக் கருதக்கூடிய நிபந்தனைகளுக்கு அமைவாகவும் மற்றும் விளக்கத்தின் போது வேறுவகையில் உரிமை நிரூபிக்கப்பட்டால் திருப்பி ஒப்படைப்பதற்கான ஒப்பந்தத்தை மேற்கொண்ட பின்னர், அப்போது அவற்றை அத்தகைய ஆளுக்கு விடுவிக்கலாம். |
| தற்போதைய நிலைமை | கலந்துரையாடலில் உள்ளது:<br><br>கட்டளைகள் சட்ட ஆவணங்கள் பதிவில் தடை எச்சரிக்கை தொடர்பான சட்டத்தை பின்வருமாறு திருத்தப்பட வேண்டுமென ஆணைக்குழு அபிப்பிராயப்பட்டது,<br><br>• தடை எச்சரிக்கை சட்டத்தரணியின் சான்றிதழ் ஒன்றின மூலம் கோப்பிடப்பட வேண்டும் என்பதோடு அது நல்லெண்ண உரிமைக் கோரிக்கையென அவர் திருப்திப்படவும் வேண்டும்.<br>• அத்தகைய சான்றிதழ் ஒன்றை சட்டத்தரணி உதாசீனமாக சமர்ப்பித்தால், அதற்கான இழப்புக்களைச் செலுத்துவதற்கான பொறுப்பை அவரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.<br>• கடமை தொடர்பான உதாசீனம் தொடர்பில் உயர் நீதிமன்றத்துக்கு முறையிடப்பட முடியும்.<br><br>சட்ட ஆணைக்குழுவின் கலந்துரையாடலுக்காக, 1923 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஆவணங்கள் கட்டளை சட்டத்தின் பதிவு தடை எச்சரிக்கை பிரிவு 32, மீது ஒரு வரைவு ஆய்வுப் பத்திரம் ஒன்றை திரு ஜீ.ஜீ.அருள்பிரகாசம் அவர்கள் முன் வைத்துள்ளார். |

6) பாலியல் இலஞ்ச சட்டத்துக்கான திருத்தம்

| | |
|---|---|
| பரிந்துரையின் பெயர் | இலஞ்ச சட்டத்துக்கு பாலியல் இலஞ்சத்தின் குற்றத்தை சேர்த்தல் |
| பின்னணி | அதிகாரமுடைய அல்லது தத்துவமுடைய பதவி ஒன்றில் உள்ள எவரேனும் ஆள், அவர் இந்த அதிகாரத்தைப் பிரயோகிப்பதில், தொழில், ஒரு பதவி உயர்வு, ஒரு உரிமை, ஒரு சிறப்புரிமை அல்லது ஏனைய வேறு சேவை, விருப்பு அல்லது ஏதேனும் வகையிலான அனுகூலத்தை வழங்குவதற்காக நிபந்தனை ஒன்றாக பாலியல் உதவிகளை வழங்குதல் அல்லது ஏற்றுக் கொள்தல் மூலம் இந்த சட்டத்தின் கீழ் குற்றமொன்றை செய்தததாகக் கருதப்படும் என்பதோடு அதற்கு ரூபாய்…… தொகைக்கு மேற்படாத குற்றப் பணத்தை விதித்தல் அல்லது மூன்று வருடங்களுக்கு மேற்டாத சிறைத்தண்டனை அல்லது இவை இரண்டு தண்டனையையும் விதிப்பதற்கு குற்றவாளியாகக் கருதப்படும்.<br><br>மேலே சொல்லப்பட்ட … பிரிவின் குறிக்கோள்களுக்காக ஒரு "பாலியல் உதவி" என்பது<br>அ) பாலியல் உறவு, அல்லது<br>ஆ) பாலியல் உறவாக அமையாத ஏதேனும் செயலை, ஆனால் அது ஒரு பாலியல் தன்மையின் உடலியல் ரீதியான, வாய்மொழிமூல அல்லது வாய்மொழியல்லாத முறையில் அமையக் கூடிய அல்லது உண்டாக்கக் கூடிய விடயம் ஆக இருக்கும். |
| தற்போதைய நிலைமை | கலந்துரையாடலில் உள்ளது:<br><br>திரு.சஞ்ஜீவ ஜயவர்த்தன ஜனாதிபதி சட்டத்தரணி அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆய்வுப் பத்திரம் சபைக்கு சமர்ப்பிக்கபபட்டு கலந்துரையாடப்பட்டது. பாலியல் தொல்லை தொடர்புடைய சட்டத்துடன் முன்மொழியபபட்ட திருத்தமானது பகுதியளவில் ஒத்திருக்கின்றதா என்பது தொடர்பில் பேராசிரியர் கெமெனா குணரத்ன அவர்கள் கருத்துரை வழங்கினார்.<br><br>மேலுள்ள விடயம் தொடர்பில் ஆய்வு செய்வதற்கு துணைக்குழுவுக்கு பின்வரும் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர்.<br>கலாநிதி ஜே.எம்.சுவாமிநாதன்<br>திரு சன்ஜய ராஜரத்னம் |

7) மத்தியஸ்த சபை சட்டம்

| பரிந்துரையின் பெயர் | மத்தியஸ்த சபை சட்டத்துக்கான திருத்தம் |
|---|---|
| பின்னணி | அத்தகைய வகைப்பிரிவுகளை விபரிப்பதில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையால் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறு பிணக்குகளை அத்தகைய வகைப்பிரிவுகளின் மத்தியஸ்தத்தின் ஊடாக அமைச்சர் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| தற்போதைய நிலைமை | கலந்துரையாடலில் உள்ளது:<br><br>அவசியமான திருத்தங்களை முன்மொழிவதற்கு மேலுள்ள சட்டத்தை மீளாய்வு செய்வற்கு நீதி அமைச்சிலிருந்து கடிதம் ஒன்று கிடைக்கப் பெற்றது. என்பதோடு அது சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>மேலுள்ள தலைப்பு தொடர்பில் ஆய்வு செய்து அவர்களின் கருத்துக்களை சமர்ப்பிப்பதற்கு திரு. திசத் விஜயகுணவர்த்தன தலைவர் அவர்களோடு மற்றும் திரு. நவீன் மாரபன அவர்களும் உள்ளடங்கிய ஒரு துணைக்குழுவை ஆணைக் குழு நியமித்தது. |

8) பொது நம்பிக்கை கட்டளைகள் சட்டம்

| பரிந்துரையின் பெயர் | பொது நம்பிக்கை கட்டளைகள் சட்டத்துக்கான திருத்தம் |
|---|---|
| பின்னணி | முன்மொழியப்பட்ட நியதிச் சட்ட ஏற்பாடுகள் வேறுவகையில் நடைமுறையில் கட்டடற்ற பொது நம்பிக்கையின் தத்துவங்கள் மீது விதிக்கப்படுகின்ற சரிபார்த்தல்கள் மற்றும் நிலுவைகள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றமையால், அவற்றை இலங்கை நியதிச் சட்டத்துக்கு சேர்த்துக் கொள்தல் மற்றும் கூட்டிணைப்புச் செய்தல். |
| தற்போதைய நிலைமை | கலந்துரையாடலில் உள்ளது:<br><br>திரு.சஞ்ஜீவ ஜயவர்த்தன ஜனாதிபதி சட்டத்தரணி அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆய்வுப் பத்திரம் சபைக்கு சமர்ப்பிக்கபபட்டு கலந்துரையாடப்பட்டது.<br><br>உள்நாட்டு சடடத்துடன் ஒப்பிட்டு சிங்கப்பூர் நாட்டின் சட்டத்தில் உளளடங்கியுள்ள நேர் அம்சங்களை அவர் தெளிவுபடுத்தியுள்ளார், விசேடமாக பின்வரும் விடயங்கள்:<br>• முதலீட்டு சபை மற்றும் பொது நம்பிக்கையுடன் ஒருப்பாட்டு செயன்முறை<br>• ஒரு பொது நிதியை உருவாக்கல்<br>• பங்கமுற்ற தரப்பினர்களால் பகிரங்க மனுக்கள்<br>• சொத்துக்களின் முறையான பதிவு இலங்கையில் பொது நம்பிக்கையின் கடமைகள் மற்றும் குறிக்கோள்களை மேலும் ஆய்வு செய்வதற்கு ஆணைக்குழு உடன்பட்டது என்பதோடு உள்நாட்டு சட்டத்தில் மேலே சொல்லப்பட்ட அம்சங்களை கூட்டிணைப்புச் செய்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. |

9) வணிக மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம்

| பரிந்துரையின் பெயர் | வணிக மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் |
|---|---|
| பின்னணி | வர்த்தக பிணக்கை விசாரணை செய்வதற்காக ஏற்கனவே உள்ள நிதியியல் பெறுமதி 5 மில்லியன் தொகையை 25 மில்லியனாக திருத்துவதற்கு முன்மொழியப்பட்டது. |
| தற்போதைய நிலைமை | 27.09.2018 ஆம் திகதியுடைய LC/R/03/2018 இலக்கத்தையுடைய கடிதத்தின் மூலம் மேலுள்ள பரிந்துரை தொடர்பில் சட்ட ஆணைக் குழுவின் தலைவர் உத்தியோக பூர்வமாக நீதி அமச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார். |

10) கைது செய்தல் மற்றும் தடுப்புக் காவலில் வைத்தல் தொடர்பிலான சட்டம்

| பரிந்துரையின் பெயர் | கைது செய்தல் மற்றும் தடுப்புக் காவலில் வைத்தல் தொடர்பிலான சட்டம் |
|---|---|
| பின்னணி | பொலிஸ் உத்தியோகத்தர்களால் கைது செய்வதற்கான நியதிச்சட்ட தத்துவத்துக்கான திருத்தப்பட்ட நடத்தை முறை கோவை |
| தற்போதைய நிலைமை | கலந்துரையாடல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது |

<u>**கால :- 2018.10.01 – 2018.12.31**</u>

*சட்ட ஆணைக்குழுவின் கூட்டங்கள் 01.10.2018 முதல் 31.12.2018 வரையிலான காலப்பகுதியின்போது கூட்டப்படவில்லை. ஆகவே, சட்டப் பிரச்சினைகள் பற்றி மேலும் கலந்துரையாடப்படவில்லை.

## 6. **நிதியியல் முன்னேற்றம் (01.01.2018 முதல் 31.12.2018 வரை)**

| விபரம் | 2018 ஆண்டுக்கான ஏற்பாடு | நிதி பிரமாணம் 66 இன் கீழ் மாற்றல்கள் | 2018 ஆண்டுக்கான மொத்த தேறிய ஒதுக்கீடு | 31.12.2018 இல் உள்ளவாறான செலவினம் | 31.12.2018 நிதியியல் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 19,520,000.00 | (175,000.00) | 19,345,000.00 | 13,172.587.81 | 68% |
| மூலதனச் செலவினம் | 1,950,000.00 | 175,000.00 | 2,125,000.00 | 1,785.957.24 | 84% |
| **மொத்தம்** | **21,470,000.00** | **-** | **21,470,000.00** | **14,958,545.05** | **70%** |

7. நிதிசார் செயலாற்றுகை (மீண்டுவரும் செலவினம்) 2018/01/01-2018/12/31 வரை

| செலவின விடயம் | செலவின விபரம் | 2018க்காக மொத்த வரவு செலவு மதிப்பீடு (ரூபா) | நி. ஓ. 66 இன் பிரகாரம் மாற்றல்கள் | 2018 மொத்தத் தேறிய ஒதுக்கீடு | 01/01/2018-31/12/2018 வரையிலான மொத்த செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | **ஆளுக்குரிய வேதனாதிகள்** | | | | |
| 1001 | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 7,500,000.00 | - | 7,500,000.00 | 5,509,249.88 |
| 1002 | மேலதிக நேர மற்றும் விடுமுறை நாட் சம்பளம் | 200,000.00 | - | 200,000.00 | 196,112.46 |
| 1003 | பிற படிகள் | 6,500,000.00 | - | 6,500,000.00 | 3,388,027.90 |
| | **பிரயாணச் செலவுகள்** | | | | |
| 1101 | உள்நாட்டு | 25,000.00 | - | 25,000.00 | 13,480.00 |
| 1102 | வெளிநாட்டு | 1,000,000.00 | (500,000.00) | 500,000.00 | 58,442.90 |
| | **வழங்கல்கள்** | | | | |
| 1201 | காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 450,000.00 | - | 450,000.00 | 422,079.13 |
| 1202 | எரிபொருள் | 450,000.00 | (50,000.00) | 400,000.00 | 399,211.74 |
| 1203 | உணவு மற்றும் சீருடை | 200,000.00 | (50,000.00) | 150,000.00 | 129,290.00 |
| | **பேணல் செலவுகள்** | | | | |
| 1301 | வாகனங்கள் | 550,000.00 | - | 550,000.00 | 549,537.02 |
| 1302 | இயந்திரங்களும் இயந்திரப்பொறிகளும் | 350,000.00 | (200,000.00) | 150,000.00 | 84,458.16 |
| 1303 | கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 100,000.00 | (80,000.00) | 20,000.00 | 8,495.00 |
| | **சேவைகள்** | | | | |
| 1402 | தபால் மற்றும் தொலைத் தொடர்பு | 500,000.00 | (100,000.00) | 400,000.00 | 316,946.38 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 1,100,000.00 | 900,000.00 | 2,000,000.00 | 1,632,500.09 |
| 1409 | பிற | 400,000.00 | - | 400,000.00 | 379,759.21 |
| | மாற்றங்கள் | | | | |
| 1502 | ஓய்வு நன்மைகள் | 15,000.00 | (15,000.00) | - | - |
| 1506 | அரசாங்க ஊழியர்களுக்கான ஆதனக் கடன் வட்டி | 180,000.00 | (80,000.00) | 100,000.00 | 84,997.94 |
| | **மொத்தம்** | **19,520,000.00** | **(175,000.00)** | **19,345,000.00** | **13,172,587.81** |

8. நிதிசார் செயலாற்றுகை (மூலதனச் செலவினம்) 2018/01/01-2018/12/31 வரை

| செலவு விடயம் | செலவு விபரம் | 2018க்கான மொத்த வரவு செலவு மதிப்பீடு ரூபா | நி. ஓ. 66 இன் பிரகாரம் மாற்றல்கள் | 2018 மொத்தத் தேறிய ஒதுக்கீடு | 01/01/2018-31/12/2018 வரையிலான மொத்த செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | **மூலதனச் சொத்துக்கள் புனர்வாழ்வு மற்றும் மேம்படுத்தல்** | | | | |
| 2002 | இயந்திரங்களும் இயந்திரப்பொறிகளும் | 20,000.00 | - | 20,000.00 | - |
| 2003 | வாகனங்கள் | 250,000.00 | 250,000.00 | 500,000.00 | 459,540.11 |
| | **மூலதனச் சொத்துக்களைக் கொள்ளல்** | | | | |
| 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 400,000.00 | 525,000.00 | 925,000.00 | 894,617.13 |
| | **திறன் விருத்தி** | | | | |
| 2401 | பயிற்சி மற்றும் திறன் விருத்தி | 1,280,000.00 | (600,000.00) | 680,000.00 | 431,800.00 |
| | **மொத்தம்** | **1,950,000.00** | **175,000.00** | **2,125,000.00** | **1,785,957.24** |

9. **அரசாங்க அலுவலர்களின் முற்பண "பி" கணக்கு - 2018 திசெம்பர் 31 திகதிக்கு**

| | செலவினத்தில் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | பற்றுமீதிகளின் உச்ச எல்லை |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுச் சட்டத்தால் அதிகாரம் வழங்கப்பட்ட எல்லைகள்: | 1,300,000.00 | 400,000.00 | 3,600,000.00 |
| ஆண்டினுள் மீள்நோக்கு எல்லைகள் | - | - | - |
| ஆண்டு இறுதியில் உள்ளபடியான பெறுமதிகள்: | 1,282,850.00 | 1,797,226.00 | 2,139,312.62 |

முற்பணக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பொழிப்பு - 2018

| | திணைக்களப் புத்தகங்களின்படி | திறைசேரி கணினி அறிக்கைகளின்படி |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் முன்கொணரப்பட்ட மீதி (2018.01.01 திகதிக்கு) | 2,478,258.62 | 2,478,258.62 |
| கூட்டுக: ஆண்டினுள் மொத்த பற்று வைத்ததல்கள் | 1,458,280.00 | 1,458,280.00 |
| கழிக்குக: ஆண்டினுள் மொத்த வரவு வைத்தல்கள் | 1,797,226.00 | 1,797,226.00 |
| ஆண்டு இறுதியின் மீதி (2018.12.31 திகதிக்கு) | **2,139,312.62** | **2,139,312.62** |

**10. 31.12.2018 ஆம் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இருக்கின்ற பதவியணியினர் தொடர்பான தகவல்கள்**

| பதவி | தரம் | சம்பளக் குறியீடு | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி | திணைக்களத்தில் உள்ள பதவியணி | | | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | *நிரந்தரம்* | *சமயாசமய* | *ஒப்பந்த* | |
| செயலாளர் | I | SL -1-2016 | 1 | - | | | 1 |
| பிரதி செயலாளர் | II | SL -1-2016 | 1 | - | | | 1 |
| உதவி செயலாளர் | III | SL -1-2016 | 4 | 3 | | | 1 |
| மொழி பெயர்ப்பாளர் | II/I | MN-6-2016 | 1 | 1 | | | - |
| கணக்கு உதவியாளர் | III/II/I | MN- 4-2016 | 1 | - | | | 1 |
| அபிவிருத்தி அலுவலர் | III/II/I | MN- 4-2016 | 4 | 1 | | | 3 |
| நூலகர் | III/II/I | MN- 3-2016 | 1 | 1 | | | - |
| முகாமை உதவியாளர் | III/II/I | MN-2-2016 | 8 | 4 | | | 4 |
| தட்டெழுத்தாளர் | III/II/I | MN-1-2016 | 1 | - | | | 1 |
| சாரதி | III/II/I | PL- 3-2016 | 4 | 4 | | | - |
| அலுவலக ஊழியர் உதவியாளர் | III/II/I | PL -1-2016 | 3 | 2 | | | 1 |
| **மொத்தம்** | | | **29** | **16** | | | **13** |